**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8082801

C

1. District : அரியலூர் மாவட்டம் PS: ஊ. த. க பிரிவு காவல்நிலையம் Year: 2023 ஆண்டு FIR No.: 01 மு.த.அ. எண் Date: 24.03.23 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: Act 1988 (as amended Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: In 2018) Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 20-03.2023
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 15.00 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-03.23 Time : நேரம் 09.00 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30. கி.மீ. கிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி ஜெயங்கொண்டம். யூனியன் உதவி கோட்ட பொறியாளர் அலுவலகம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. மணிமாறன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நாமையன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/23 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் ஒப்பந்ததாரர் (g) Address : முகவரி தேவாங்க முதலியார் தெரு ஜெயங்கொண்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திருமதி. வசந்தா பா A.D.E உதவி கோட்ட பொறியாளர். ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

24.03.2023-ம்தேதி காலை 09.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், தேவாங்க முதலியார் தெருவைச்சேர்ந்த ராமையன் என்பவரது மகன் திரு.R.மணிமாறன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர், R.மணிமாறன், த/பெ ராமையன், தேவாங்க முதலியார் தெரு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம். பெறுநர், உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, நான், மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் டிப்ளமோ சிவில் இஞ்சினியரிங் படித்துள்ளேன். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். நான், ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளராக உள்ளேன். எங்கள் ஒன்றியத்தில் குட்டக்கரையைச் சேர்ந்த திரு.துரைமாறன் என்பவர் அரசு ஒப்பந்த பணிகளை காண்ட்ராட் எடுத்து செய்து வருகிறார். அவர், காண்ட்ராக்ட் எடுத்து செய்யும் பணிகளில் சிலவற்றை என்னிடம் கொடுத்து செய்யச்சொல்வார். நானும் அவ்வாறே செய்து கொடுப்பேன். நான் செய்யும் பணிகள் சம்பந்தமான பில்கள் அனைத்தையும் என்னையே பார்க்க சொல்வார். நானும் அதன்படி

[Separate Sheet Enclosed]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/3/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24/3/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R.CHANDRASEKAR
Rank: நிலை DSP/VAC/AR No. எண்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

ஜெயங்கொண்டம் யூனியன் அலுவலகத்திற்கு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பார்த்து, பில் பாஸ் செய்வதற்கான வேலைகளை கவனிப்பேன். பின்னர் திரு.துரைமாறன் அவர்களது பெயருக்கு காசோலை வழங்கப்பட்டதும், அவரது வங்கி கணக்கில் செலுத்துவதற்கு கலெக்சனில் போட்டுவிடுவேன். காசாக்கம் செய்யப்பட்ட பின்னர் நான் செய்த பணிகளுக்கான தொகையினை திரு.துரைமாறன் எனக்கு கொடுத்துவிடுவார். அதுபோல் கடந்த ஆண்டு திரு.துரைமாறன் எடுத்த ஒப்பந்த பணிகளில் கங்கைகொண்ட சோழபுரம் ஊராட்சி, மேட்டுப்பாளைம் கிராமத்தில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் பணியையும், தழுதாழைமேடு ஊராட்சி, வாணதிரையன்குப்பம் விநாயகர்கோவில் அருகில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் பணியையும், அதே கிராமத்தில் வாணதிரையன்குப்பம் உலகநாதன் வீடு அருகில் உள்ள சிமெண்ட் சாலை அமைத்தல் பணியையும் மற்றும் முத்துசேர்வாமடம் ஊராட்சி கிழத்தெருவில் உள்ள பகத்சிங் வீடு அருகில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும் என்னிடம் கொடுத்து செய்யச்சொன்னார். நானும் மேற்கண்ட பணிகளை நல்லமுறையில் செய்து முடித்துவிட்டேன். அப்பணிகளை ஜெயங்கொண்டம் யூனியன் உதவி பொறியாளர் திரு.குமார் என்பவர் பார்வையிட்டு M Book-ல் கையெழுத்திட்டார். பின்னர் உதவி கோட்ட பொறியாளர் திருமதி.வஹிதாபா என்பவர் மேற்படி பணிகளை நேரில் பார்வையிட்டார். அப்போது, அவர் என்னிடம் மேற்கண்ட நான்கு பணிகளுக்கான வேலையின் மதிப்பு ரூ.15,41,530/-க்கு பணி செய்துள்ளீர்கள், ஆகையால் மேற்படி தொகைக்கு 2%-ம் கமிசஷனாக கொடுத்தால் உடனே M Book-ல் வேலை முடிந்துவிட்டதாக எழுதி அனுப்பி விடுகிறேன், இல்லை என்றால் உங்கள் பில் பாஸாவதற்கு லேட் ஆகும் என்று கூறினார். பின்னர் நான் அவரிடம் ஏதாவது பார்த்து செய்யுங்கள் மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர் பார்த்து செய்வதற்கு என்ன இருக்கிறது, நான் சொன்னபடி ரெடி பண்ணிட்டு வாங்க பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் நான் கடந்த 20.03.2023-ம்தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் ஜெயங்கொண்டம் யூனியன் அலுவலகத்திற்கு சென்று உதவி கோட்ட பொறியாளர் திருமதி.வஹிதாபா என்பவரை நேரில் சந்தித்து பில் சம்பந்தமாக கேட்டபோது நான் கேட்ட பணம் ரெடி பண்ணிக்கிட்டு வந்துட்டிங்களா என்று கேட்டார். பணம் இல்லாமல் ஏதும் செய்ய முடியாதா மேடம் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், உங்களுக்கு தெரியாதா, பணம் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது, வேண்டுமானால் ரூ.15,41,530/-ல் ரூ.41,530/-ஐ கழித்துக்கொண்டு மீதமுள்ள ரூ.15,00,000/-க்கு 2%-ம் கமிசஷன் ரூ.30,000/-ம் கொடுத்துவிடுங்கள், உங்கள் வேலை முடிந்து விட்டதாக BDO-க்கு எழுதி அனுப்பி விடுகிறேன் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றாலும், அப்போதைக்கு சரிங்க மேடம் தற்போதைக்கு என்னிடம் பணம் இல்ல மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் வேலை முடிந்ததாக எழுதி அனுப்பி விடுகிறேன், நீங்கள் பில் பாஸானதும் எனக்கு ரூ.30,000/-ம் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார். பின்னர் 23.03.2023-ம்தேதியன்று பகல் சுமார் 12.00 மணியளவில் ஜெயங்கொண்டம் யூனியன் அலுவலம் சென்றபோது பில் ரெடியாகிவிட்டதாக சொன்னார்கள். பின்னர் நான் காசோலையை பெற்றுக்கொண்டு மதியம் சுமார் 01.30 மணியளவில் ஜெயங்கொண்டத்தில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் கலெக்சன் போட்டுவிட்டு, பின்னர் மதியம் சுமார் 03.30 மணியளவில் உதவி கோட்ட பொறியாளர் திருமதி.வஹிதாபா அவர்களை சந்திப்பதற்காக ஜெயங்கொண்டம் யூனியன் அலுவலகம் சென்றபோது அவர் கலெக்டர் அலுவலகத்திற்கு மீட்டிங் சென்று விட்டதாக சொன்னார்கள். பின்னர் நான், அவரது டெக்னிக்கல் அசிஸ்டென்ட் திரு.செந்தில் என்பவரை மாலை சுமார் 04.45 மணியளவில் செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது, மேடம் மீட்டிங்கு போயிருக்காங்க, உங்களை நாளை மதியம் வந்து பார்க்க சொன்னாங்க என்று சொன்னார்.

எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தால் திருமதி.வஹிதாபா என்பவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.30,000/-த்தை ரெடிபண்ணிக்கொண்டு, லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட உதவி கோட்ட பொறியாளர் திருமதி.வஹிதாபா என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (sd.) (ஆங்கிலத்தில் ஒப்பம் தேதி 24.03.2023). **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant on 24.03.2023 at 09.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 24.03.2023 at 10.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2023, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) R.Chandrasekar, Deputy Superintendent of Police, V&AC, Ariyalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

24/3/2023.
DSP/V&AC/Arl.